**20.03.2020**

**பத்திரிக்கை செய்தி**

**மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர், டாக்டர். சி. விஜயபாஸ்கர் அவர்கள் இன்று (20.03.2020) சென்னை மெட்ரோ இரயில் நிலையங்களில் கொரோனா வைரஸை தடுப்பதற்காக மேற்கொண்டு வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்தார்**

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், மெட்ரோ இரயில் மற்றும் மெட்ரோ இரயில் நிலையங்களில் கொரோனா வைரஸை தடுப்பதற்காக மேற்கொண்டு வரும் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர். சி. விஜயபாஸ்கர் அவர்கள் இன்று (20.03.2020) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின் போது மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் ஏஜி-டிஎம்எஸ் மெட்ரோ இரயில் நிலையத்திலிருந்து புறநகர்ப் பேருந்து நிலையம் மெட்ரோ வரை மெட்ரோ இரயிலில் பயணம் செய்தார். ஏ.ஜி-டி.எம்.எஸ், நந்தனம், சைதாப்பேட்டை, சின்னமலை மெட்ரோ, கிண்டி, ஆலந்தூர், ஈக்காட்டுத்தாங்கல், அசோக் நகர், வடபழனி, அரும்பாக்கம் மற்றும் புறநகர்ப் பேருந்து நிலையம் மெட்ரோ ஆகிய மெட்ரோ இரயில் நிலையங்களிலும் மெட்ரோ இரயிலிலும் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை நேரில் பார்வையிட்டு அலுவலர்களிடம் கேட்டறிந்தார். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் சுகாதாரத்தின் முக்கியத்துவத்தை பயணிகளிடம் எடுத்துரைத்தார். மேலும் கொரோனா வைரஸை தடுப்பதற்காக சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் மேற்கொண்டு வரும் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை கேட்டறிந்தார்.

இந்த ஆய்வின் போது, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. பிரதீப் யாதவ் இ.ஆ.ப., மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை செயலாளர் டாக்டர் பீலா ராஜேஷ் இ.ஆ.ப., சுகாதாரத் துறை இணைச் செயலாளர் டாக்டர் எஸ். நடராஜன் இ.ஆ.ப., பொது சுகாதாரத்துறை இயக்குநர் டாக்டர் குழந்தை சாமி மற்றும் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் உயர் அலுவலர்கள் உடன் சென்றிருந்தனர்.